ॐ

**Balu Saravana Sarma**

*Prohithar – Astrologer*

**No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677**

Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

---

## ஆடி மாதம் ( Aadi - Mithuna Month) 17th July to 16 Aug 2009

## Auspicious Dates based on Drik-Vakya system, Virothi Varusham(2009 – 2010)

### முகூர்த்த நாட்கள், திருக்கணிதம் – வாக்கியப்படி, விரோதி வருஷம் (2009-2010)

*குறிப்பு: சந்திர பஞ்சாங்கத்தை பயண்படுத்தும் தெலுங்கு, கன்னடம் மற்றும் வட இந்தியர்கள் ஆடி அமாவாசை பிறகு திருமணம், கிரஹப்பிரவேசம் மற்றும் அனைத்து சுப நிகழ்ச்சிகளையும் செய்வார்கள் (அவர்களுக்கு ஆவணி மாதம் )*

ஆடி மாதத்தில் சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணத்தை துவக்கும் காலம் தட்க்ஷிணாயனம் என்று அழைக்கப்படுகிறது. இம்மாத செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகள், முருகன் மற்றும் அம்பாளுக்கு மிகவும் உகந்த நாட்களாகும்.

தீமிதி, பால்குடம் எடுத்தல், கரகாட்டம், ஆடிஆமாவாசை, கூழ்வார்த்தல், மரம் நடுதல்(ஆடிப்பட்டம் தேடி விதை), கன்னிகோவில் பூஜை, முடி இறக்குதல், போன்றவை நடைபெறும் மாதம் ஆகும் . இம்மாதம் தமிழ் கிராமிய கலை, கலாசாரம், பண்பாட்டின் வடிவத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் மாதம் .

சிலம்பு, பொய்கால் குதிரை, பம்பை, உடுக்கை, தப்பட்டம், புலிவேஷம், மானாட்டம், மயிலாட்டம், தாரை, கூத்து, பறை மோளம், வில்லுப்பாட்டு போன்ற கிராமிய கலைகளை கட்டிக்காக்கும் ஏழை கலைஞர்களின் வாழ்வாதாரமாக திகழும் மாதம் ஆகும். தமிழகமே விழாக்கோலம் பூண்டு மகிழ்வுறும் இனிய மாதம் இது. ஊர் ஒன்றுபட்டு விழா எடுக்கும் , ஞாயிறு தோறும் இரவை வானவெடிகளால் அலங்கரிக்கும் இனிய காலம்.

***"ஆடி ஆத்தாவீட்டுக்கு போடி"*** என்கிற கிராமத்து வரிகள் இளம் ஜோடிகள் பிரிந்து வாழும் காலத்தை நினைவூட்டும் ! இம்மாதத்தில் திருமணமான இளம் பெண்கள் தங்கள் தாய்வீட்டிற்கு சென்று தங்குவார்கள். உறவை வளர்க்கும் இனிய பிரிவு இது! ஆயினும் ஏதேனும் ஒரு காரணம் கொண்டு மாமியார் வீட்டிற்கு மாப்பிள்ளைகள் சென்று வருவார்கள்!!!!

இம்மாதம் துவங்கி தை மாதம் வரை பண்டிகைகள் தொடர்ந்து வந்து வணிக பொருளியலை மேம்படுத்தும் காலங்களின் துவக்கம்தான் ஆடி மாதம்.. !

---

**ஆடி 3 ஞாயிறு(19-7-2009)**

காலை 6 மணி மேல் நாள் முழுவதும் (6am to Full day)
சிறப்பான நேரம் : காலை6 முதல் 9 மணி வரை
கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 4 திங்கள் (20-7-2009)**

அதி காலை முதல் காலை 10:30 மணி வரை மட்டும் (Early Morning to 10:30 am)
சிறப்பான நேரம் : காலை6 -7:30 மற்றும் காலை 9-10:30
கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 11 திங்கள் (27-7-2009) வாஸ்து நாள் Vastu Date**

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை (6 am to 6pm)
சிறப்பான நேரம் : காலை6 -7:30
கணபதி ஹோமம், கிரஹப்பிரவேசம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Housewarming, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**வாஸ்து நேரம்:** (சென்னை நகரம்)
துவக்கம் காலை 6:41 மணி, முடிவு 8:11 மணி, பூஜைநேரம்: 7:35 முதல் 8:11 வரை

**ஆடி 15 வெள்ளி (31-7-2009) வரலட்சுமிவிரதம்**

அதிகாலை முதல் நாள் முழுவதும் (Early morning to 12pm)
சிறப்பான நேரம் : காலை 7:30 முதல் காலை10:30 மணி வரை
கணபதி ஹோமம், கிரஹப்பிரவேசம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Housewarming, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 17 ஞாயிறு (2-8-2009)**

அதிகாலை முதல் நாள் முழுவதும் (Early morning to 12pm)
சிறப்பான நேரம் : காலை 7:30-9 மற்றும் பகல் 11 முதல் நன் பகல் 12 மணி வரை
கணபதி ஹோமம், கிரஹப்பிரவேசம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Housewarming, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 18 திங்கள் (3-8-2009) ஆடிப்பெருக்கு**

திருமணம் தடை நீங்கி விரைவாக நடைபெற வேண்டி திருக்கோவில் குளம், ஆற்றில், கடலில் விளக்கேற்றி வழிபடுதல். சுமங்கலி, கன் னி பூஜைக்கு மிகவும் சிறப்பான நாள்

**ஆடி 22 வெள்ளி (7-8-2009)**

காலை 9 மணிக்கு மேல் நாள் முழுவதும் நல்ல நாள் (9 am to 11pm)
சிறப்பான நேரம் : காலை 9 மணி முதல் நன் பகல் 10:30 மணி வரை
கணபதி ஹோமம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 24 வியாழன் (9-8-2009) சங்கடஹர சதுர்த்தி (4:30 pm to 7 pm)**

மாலை 4:30 மணி மேல் 7 மணி முன் னர் சங்கடஹர - கணபதி ஹோமம் மிகவும் நன் று

**ஆடி 25 திங்கள் (10-8-2009)**

அதிகாலை முதல் நாள் முழுவதும் (Early morning to 12pm)
அதிகாலையில் சதுர்த்தி கணபதி ஹோமம் நன் று
சிறப்பான நேரம் : காலை 6 மணி முதல் 7:30 மணி வரை
கணபதி ஹோமம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

**ஆடி 31 ஞாயிறு (16-8-2009) (Early morning to 12pm)**

அதிகாலை முதல் நாள் முழுவதும்
சிறப்பான நேரம் : காலை 6 மணி முதல் 7:30 மணி வரை
கணபதி ஹோமம், திருமணம், நிச்சியம், மஞ்சள் நீராட்டு, சீமந்தம்
Ganapathi homam, Wedding, Betrothal, Puberty Function, Pregnancy Ceremony

---

**முழு சூரிய கிரஹணம் 22 ஜுலை 2009 புதன் கிழமை**

| | | |
|---|---|---|
| இந்தியா நேரம்-துவக்கம்: காலை 5:28, | உச்சம்: காலை8:05 | முடிவு: காலை10:42 |
| சென் னை நேரம்-துவக்கம்: சூரிய உதயம் முன் | உச்சம்: காலை6:21 | முடிவு:காலை 7:18 |

◆ பூசம், புனர்பூசம், ஆயில்யம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்தினர் அன் னதானம் செய்தல் நன் று

மேலும் முழுமையான தகவலுக்கு http://www.prohithar.com/eclipses.html

Figure 6: Path of Total Solar Eclipse of 2009 Jul 22 Through Asia




**சந்திர கிரஹணம் (புவி வெளி மறை நிழல்) 6 ஆகஸ்ட் 2009**

அன் றுஅதிகாலை இந்திய நேரம் காலை 4:31 முதல் காலை 7:47 வரை நிகழும் இந்த கிரஹணத்தில் பூமியின் உண்மையான நிழல் மூலமாக சந்திர கிரஹணம் ஏற்படவில்லை, எனவே இதை கிரஹணம் என் று கணக்கில் கொள்ளவேண்டாம்

தகவல் உதவி:- இந்திய அரசு வானியல் அவதான துறை: http://www.packolkata.org

◆ **வாடகை வீடு குடிபுக (மாத முதல் தேதி)** Rental House shifting

31-7-2009, 2-8-2009 ஆகிய நாட்களில் அதிகாலை மற்றும் நாள் முழுவதும்

◆ **முகூர்த்த துணி வாங்க, தாலி பொட்டு செய்ய(பொன் உருக்க)**

ஜுலை: 20, 27, 31, ஆகஸ்ட் 2, 7, 10, 16

◆ **பூமி பூஜை (வாஸ்து) நாள்:** ஆடி 11 திங்கள் (27-7-2009) வாஸ்து நாள்

◆ **கரிநாள்:** ஜுலை 18, 26, ஆகஸ்ட் 5

◆ **அமாவாசை :** ஆடி அமாவாசை - 21 ஜுலை 2009 செவ்வாய்

◆ **பௌர்ணமி :** 5 ஆகஸ்ட் 2009 புதன் கிழமை முழு பௌர்னமி நாள்

◆ **தெலுங்கு மாதபிறப்பு:** சிரவண சுத்தம் புதன் கிழமை 22 ஜுலை 2009 (Telugu Month : Sravana Begin 22/7/2009)

◆ **ஆடி மாத பிறப்பு:** திருக்கணிதப்படி ஆனி மாத கடைசி நாள்16 ஜுலை 2009 திங்கள் மாலை 3:08 மணி அளவில் சூரியன் கடக ராசியில்(தக்ஷிணாயனம்-சூரியனின் தென் புல பயணம் துவக்கம்) பிரவேசிக்கிறார், வாக்கிய கணிதப்படி அன்று இரவு 9:21 பிறப்பதால் மறுநாள் செவ்வாய் 17 ஜுலை 2009 அன்றுதான் ஆடி முதல் நாள்

◆ **ஆவணி மாத பிறப்பு** : திருக்கணிதப்படி ஆடி மாதம் கடைசி நாள்(ஆடி 31) ஞாயிறு அன்று இரவு 11:28 மணி அளவில் சூரியன் நிராயண முறையில் சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார். இரவில் பிறப்பதால் மறுநாள் உதயமே மாதப்பிறப்பாகும் அடிப்படையில் 17 ஆகஸ்ட் 2009 திங்கள் கிழமை ஆவணி முதல் தேதி என கணக்கில் கொள்ளவேண்டும்.

ஆடி மாத கிரக நிலை: திருக்கணித நிராயண முறைப்படி







**இரவு வான் வெளி வரைபடம் Night Sky Chart: http://www.heavens-above.com/skychart.aspx**

---

**ஆடி அமாவாசை :**

21 ஜுலை 2009 செவ்வாய் அன்று இந்திய நேரப்படி அமாவாசை திதி பகல் 11:50 மணி அளவில் துவங்கி மறுநாள் புதன் காலை 8 மணி 5 நிமிடம் வரைஉள்ளது எனவே செவ்வாய்தான் சர்வ அமாவாசை ஆகும்.

அன்றைய தினம் தர்பணம் செய்தாலும், மறுநாள் கிரஹணத்தின் சம்பவிக்கும் பொழுதும், கிரஹண முடிவில் செய்தாலும் சிறப்பானதே ஆகும்

அன்றைய தினம் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு நிதி உதவி, பொருள் உதவி செய்து முன்னோர்களின் ஆசியை பெறுங்கள்

வெளிநாடுகளில்உள்ளவர்கள் அருகில் உள்ள கோவிலுக்கு சென்று தர்பனம், ஆத்மசாந்தி வழிபாடு நடத்துதல் நன்று சிங்கப்பூர், மலேசியா நாட்டினர் இருநாட்ககளிலும் வழிபாடு நடத்தலாம், ஆஸ்திரேலியா வினர் மறுநாள் 22-7-2009 அமாவாசை வழிபாடு நடத்தவும்

**ஆவணி அவிட்டம்:**

இவ்வருடம் சிராவண சுத்தம் பௌர்னமி ஆடி மாதத்தில் வருவதால் 5 ஆகஸ்ட் 2009 அன்று ஆவணி அவிட்டமும் மறுநாள் காயத்ரிஜபம்மும் கடைபிடிக்க வேண்டும்

**வேண்டுகோள் :**

மிக அதிக கவனத்துடன் இதை அளித்துள்ளேன் . பிழை ஏதும் இருப்பின் தெரியப்படுத்தவும். பிழை குறித்து இணைய தளத்தில், அறிவிக்கப்படும், இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் தமிழகத்திற்கு பொருந்தக்கூடியது. முகூர்த்த நேரம் இடத்திற்கு இடம் மாறுபடும் எனவே தங்களின் பகுதிக்கு உரிய மிகச்சரியான முகூர்த்த நேரம் அறிய தங்கள் ஊரின் புவிநிலை (GPS Data) தகவலை எனக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பினால் உகந்த நாளை கணித்து தருகிறேன் .

---

**பாலு சரவண சர்மா,** *புரோகிதர்- ஜோதிடர்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
**மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com**

© காப்புரிமை

ஞாயிறு 31 மே 2009